


# நிர்வாக கல்வி

பேராசிரியர் பாலா வி.பாலசந்திரன்








**''எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு அவ்வ துறைவது அறிவு''. (திருக்குறள்)**

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

''கூர்மையான அறிவுடனும், உறுதியான மனத்துடனும்,உலகை நம்மால் நகர்த்த முடியும்'', என்று விளக்குகிறார் பேராசிரியர் பாலா வி.பாலசந்திரன். அவர் அதைத்தான் செய்திருக்கிறார், செய்து வருகிறார். அறிவை வளர்த்து, உலகோடு நகர்ந்து, பிறகு தாமே அதனை நகர்த்த தைரியமாக முற்பட்டு, வெற்றி வாகை சூடினார். சமீபத்திய உதாரணம், 'க்ரேட் லேக்ஸ் இன்ஸ்டிட்டிட்யூட் ஆஃப் மேனாஜ்மென்ட்' (Great Lakes Institute of Management). அவரது நிறுவனத்தின் வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் உருண்டைக் கருங்கல் இதைத்தான் குறிப்பிடுகிறது போலும்!

**இந்தியாவிலுள்ள வணிகப் படிப்பைக் கற்றுத்தரும் 10 சிறந்த கல்வி நிறுவனங்களுள் ஒன்றாகக் கருதப்படும் ஜி.எல்.ஐ.எம். ஒரு வருட இளநிலை பட்டம் அளிக்கும் முதல் தனியார் கல்வி நிறுவனம் எனலாம்**

2004ஆம் ஆண்டு சைதாப்பேட்டையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு இடத்தில் தொடங்கப்பட்ட 'க்ரேட் லேக்ஸ் இன்ஸ்டிட்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட்' 'ஐ.ஐ.எம்' எனப்படும் 'இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்' களுக்கு சென்னையின் பதிலாகக் கருதப்படுகிறது. இன்று, மஹாபலிபுரத்திற்கு அருகாமையில் விழும்பொன் மதிப்பீடு (platinum rated) பெற்ற ஒரு படர்ந்து விரிந்த பசுமையான 30 ஏக்கர் தலத்தில் கம்பீரமாக அமைந்திருக்கிறது. பிரம்மாண்டமான கட்டிட அமைப்பு 'பூகோள மனப்பாங்கு, வேர்களோ நமது நாடு' (Global Mindset, Indian Roots) என்ற அவர்களது குறிக்கோளை எதிரொலிக்கிறது.

மற்றவர் பொறாமைப்படும் அளவுக்கு ஆசிரிய குழுவினை இந்தியாவிலுள்ள வணிகப் படிப்பைக் கற்றுத்தரும் 10 சிறந்த கல்வி நிறுவனங்களுள் ஒன்றாகக் கருதப்படும் ஜி.எல்.ஐ.எம். ஒரு வருட இளநிலை பட்டம் அளிக்கும் முதல் தனியார் கல்வி நிறுவனம் எனலாம். இந்தப் பட்டப்படிப்பு, 2-4 வருடங்கள் வரை வேலை அனுபவம் பெற்று, இன்னும் உயர நினைப்பவர்களுக்காக.

இப்பொழுது இரண்டு வருடப் பட்டப்படிப்பையும் அளிக்கிறது இந்த நிலையம் இது, தங்கப்பதக்கம் பெற்று ஆனால் வேலை அனுபவம் இல்லாத ஒரு மாணவிக்காகத் தொடங்கப்பட்டது. மேலும் இந்த ஒரு நிகழ்வு ஸ்விம் (SWIM) எனும் பெண்களுக்கான ப்ரத்யேகமாக தொடங்கப்பட்ட பாடத்திட்டம் உருவாகக் காரணமாயிற்று.

ஸ்டார்ட்-அப்ஸ் (start-ups) எனப்படும் புதிய தொழில் தொடங்குபவர்கள் இந்தக் கல்வி நிலையத்தில் உருவாகிறார்கள் வருடாவருடம் நடைபெறும் 'ஹைபரியான்' (Hyperion) நிகழ்ச்சி மூலமாக. ஒரு புதிய தொழில் தொடங்கும் பணி இவர்களது 2-வருட பாடத்திட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
'கர்ம யோகா' எனும் திட்டத்தின் கீழ், இந்த கல்வி நிலையம் தத்து எடுத்துக்கொண்டிருக்கும் 21 கிராமங்களுக்கு வாரம் ஒருமுறையாவது மாணவர்கள் சென்று கிராமத்து மக்களுடன் உரையாட வேண்டும். இது போன்ற பல புதுமையான அனுபவங்கள் மாணவர்களுக்குக் கிடைப்பதால் அவர்களது அடிமட்ட தொழில்நுட்ப அறிவும், தகவல் தொடர்பு திறனும் (communication skills) அதிகரிக்கிறது.
படிப்பை முடித்த கையோடு மாணவர் அனைவருக்கும் வேலை கிடைப்பதைப்பற்றியும், பழைய மாணவர்கள், புதிய செயல்திட்டங்களுக்கு பண உதவி செய்வதையும், அவ்வப்பொழுது சிறப்பு விரிவுரையாளர்களாக (guest lecturers) வருவதையும் முகத்தில் பெருமிதம் பொங்க டாக்டர். பாலா குறிப்பிடுகிறார்.

ஜே.எல்.கெல்லாக் மேலாண்மை பள்ளியின் (J L Kellogg School of Management) ஓய்வு பெற்ற பேராசிரியர் (Professor Emeritus)' அங்கிள் பாலா' என மாணவர்களால் செல்லமாக அழைக்கப்படும் டாக்டர். பாலா, சுவாரஸ்யமான உரையாடல் புரிவதில் வல்லவர். புதுக்கோட்டையில் கழித்த தனது இளமைக்கால அனுபவம் முதல், இப்பொழுது தனது லட்சியமான 'ஜி.ஐ.எல்.எம்', மற்றும் தனது குடும்பமாகக் கருதும் மாணவர் குழு வரை பல விஷயங்களை நம்மோடு பகிர்கிறார்.

'இளைஞனாக இருந்தபொழுது என்னை யோசிக்க வைத்ததும், கனாக் காண வைத்ததும், நேர்மறையாக என்னை சிந்திக்க வைத்ததும் சினிமாதான்' என்று கூறும் இவர், பழைய தமிழ் திரைப்படங்களிலிருந்து காட்சிகளை அப்படத்தின் வசனங்களோடு விவரிக்கிறார். வளாகத்தில் காணப்படும் பல மேற்கோள்கள், மாணவர்களுக்கு அறநெறியினை போதித்து நல்வழி காட்டி, அவர்கள் வாழ்க்கையை நம்பிக்கையோடு அதே சமயத்தில் அடக்கத்தோடு அணுகுவதற்கு வழி செய்கின்றன. இன்றைய திரைப்படங்களில் இதுபோன்ற நெறிகள் காணப்படுவது அரிதாகி வருவதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

கல்வி பயிற்றுவித்தலில் தனக்கு இருக்கும் பேரார்வத்தினை 1960களில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் உணர்ந்தார். 1967ஆம் ஆண்டு, ஒஹையோவில் உள்ள டெய்டன் பல்கலைகழகத்தில் (University of Dayton) மேற்படிப்பு படிப்பதற்காக சேர்ந்தார். இள மனைவியும், குழந்தையும் இந்தியாவில். சிறுவயதில் அவர் பட்ட துன்பங்கள்,

கார்னகி-மெல்லன் பல்கலைகழகத்தில் (Carnegie&Mellon University) முனைவர் பட்டம் பெற அவரை ஊக்குவித்தன. 1973ஆம் ஆண்டு, கெல்லாக் மேலாண்மை பள்ளியில்



(Kellog Institute of Management)
விரிவுரையாளராகச் சேர்ந்தார்.
சில காலங்களுக்குள், கணக்கியல் தகவல் மேலாண்மை (Department of Acounting Information and Management) துறையின் தலைவராக ஆன இவர், விரைவில் அந்தத் துறையின் இயக்குனரானார்.

‘ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டி (mentor) தேவை’ என்று குறிப்பிடும் இவர், கெல்லாக் மேலாண்மை பள்ளியின் ஓய்வு பெற்ற முதல்வராகிய (Dean Emeritus) திரு.டொனால்ட் பி.ஜேகப்ஸ் அவர்களை தமது வழிகாட்டியாகக் கருதுகிறார்.

அவர்தான் இவருக்கு கலாசார இன வேற்பாடுகளுக்கேற்ப தொழில் தொடங்கும் வாய்ப்பினை ஆராயும் கல்வி நிறுவனங்களின் அத்தியாவசியத்தை உணர்த்தியவர்.’’ பார்வை உலகை நோக்கி இருந்தாலும், அடிவேர்களுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்’’.

அயல்நாடுகளில் இவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விரிவுரைகள் நிகழ்த்தியதையும், இவரது பல கட்டுரைகள் பிரசுராமாகி வெளிவருவதையும் கவனித்த இந்திய அரசு, இவரை குர்காவ்ன் (Gurgaon) நகரில் தொடங்கப்பட்ட மேலாண்மை வளர்ச்சி கல்வி நிலையத்தின் (Management Development Institute) வழிகாட்டியாக நியமித்தது. இந்த கல்வி நிலையம் அமைய உதவிய இவர், அரசு அதிகாரிகளுக்கான ‘உலக பொருளாதாரம்’ (Global Economy) பற்றிய பாடதிட்டத்தினை புனைந்தார். 2001ஆம் ஆண்டு ‘பத்மஸ்ரீ’ விருதினைப் பெற்ற டாக்டர். பாலாவை ஆந்திர பிரதேசஅரசு, நவீன மேலாண்மை கல்வி நிலையம் ஒன்றை அமைக்க இவரை அழைக்க ‘இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ்’ ஹைதராபாதில் பிறந்தது.

இதேபோன்ற ஒரு கல்வி நிறுவனத்தை சென்னையில் தொடங்க பேராவல் கொண்டதன் விளைவே ஜி.எல்.ஐ.எம்.’’ கல்வி என்பது பெருங்கடலைப் போன்றது. இதனை அளவிடமுடியாது. இதிலிருந்து ஒரு துளி எடுப்பதால், இந்தப் பெருங்கடலுக்கு ஒன்றும் ஆகி விட்டது’ என்று வட அமெரிக்காவின் க்ரேட் லேக்ஸினை (Great Lakes) குறிப்பிடும் இவர், தொடர்ந்து, ‘‘ஏரிகள் பெருங்கடல் போன்றவை. ஏரிகளின் நீர் இனிக்கவும் செய்யும். மேலும், இந்த கல்வி நிலையத்திற்கு நிதியுதவி செய்தவர்கள் ‘க்ரேட் லேக்ஸ்’ பகுதியைச் சார்ந்தவர்கள். எனவே, இந்த நிலையத்தை அவர்களுக்கு நான் அர்ப்பணிக்கிறேன்’’ என்கிறார். இந்த கல்வி நிலையத்தின் வகுப்பு அறைகளின் பெயர்கள் ‘வீராணம்’, ‘மிச்சிகன்’ போன்ற ஏரிகளின் பெயர்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

பாலா அவர்களின் வாழ்க்கை தத்துவம், வேதாந்தத்தின் மையப்பகுதியாகிய ‘புருஷார்த்தத்தை’த்- தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்- தழுவி இருக்கிறது. ‘‘இளமையில் கல்-எவ்வளவு முடியுமோ அவ்வளவு நடுவயதில் பணம் சம்பாதி-எவ்வளவு முடியுமோ அவ்வளவு. பிறகு திருப்பிக்கொடு-நல்ல விஷயங்களுக்காக. ஏனென்றால், நீபோகும்பொழுது உன்னுடன் எதையும் எடுத்துச் செல்வதில்லை’’

டாக்டர். பாலாவே ஒரு நிலையம்தான். தமது அறிவில் பெருமிதம் கொள்ளும் அதே வேளையில், தம்மை ஒரு புதிராக ஆக்கி விட்ட சவால்களினால் அடக்கம் இவரை ஆள்கிறது. அவரது வாழ்க்கை சக்கரம் ஒரு முழு சுழற்சி-தனது கல்விக்கும், தனது சகோதரர்களின் கல்விக்கும் தாமே பணம் கட்டியதிலிருந்து, உலகத்தரம் வாய்ந்த மேலாண்மை கல்வி வழங்கும் நவீன கல்வி நிலையங்களைத் தொடங்கி நிர்வகித்து வரும்வரை.

இளைஞர்களுக்கு அவர் கூறுவது- ‘‘பாருங்கள்; நன்றாகக் கூர்ந்து பாருங்கள்-ஒரு இலக்கு கிடைக்கும்வரை’’. பலர், ஒரு கனவினைக்கூட நனவாக்க முடியாமல் தவிக்க, இவர் தாம் கண்ட ஒவ்வொரு கனவினையும் நிஜமாக்கிக் காட்டியிருக்கிறார்- ஒரு தமிழ்ப் படத்தில் நடித்தது உள்பட. ஒழுக்கம், கட்டுப்பாடு- இவற்றின் சிறந்த உதாரணம் இவர்.

**சென்னையின் முதன்மை சான்ற வெற்றி வீரர்.**